egistered as a Newspaper. பக்கங்கள்: பத்து விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 21 ஹிஜ்ரி 1427 ஜ ஆகிர் 07 (06.07.2006) வியாழக்கிழமை இதழ் 278

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.





வன்னியில் பிரத்தியேக தளமொன்றில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கரும்புலிகளின் பொதுப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து - பொதுச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்துகிறார்.

படங்கள்:- விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு


# இரட்டை வேடம் போடுகிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

## தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி—

இலங்கை சமாதான முயற்சிகள் விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரட்டைவேடம் போடுவதாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு முகம்கொடுக்கும் விதமாக முதல் படிநிலையாக அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய 12



## சுன்னாகத்தில் நேற்று இருவேறு தாக்குதல்கள்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் நேற்றும் பரவலாக படையினர்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிததன.

சுன்னாகத்தில் - காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு காவல்நின்ற பொலிஸார்மீது கைக்குண்டுத் தாக்குதல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் பலி!

வவுனியா—


வவுனியா - பிரப்பமடுவில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக்காலை 9 மணியளவில் இரண்டு கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. மகா கச்சக்கொடி - பிரப்பமடு வீதியில் இடம்பெற்ற இந்தச்

கிளிநொச்சி

இலங்கை சமாதான முயற்சிகள் விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரட்டைவேடம் போடுவதாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு முகம்கொடுக்கும் விதமாக முதல் படிநிலையாக அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய 12 பேர்கொண்ட பல்லின குழு (10 ஆம் பக்கம் பார்க்க)




வவுனியா

வவுனியா - பிரப்பமடுவில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக்காலை 9 மணியளவில் இரண்டு கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. மகா கச்சக்கொடி - பிரப்பமடு வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# எமது பலமே தமிழ்மக்களுக்கு அமைதியான வாழ்வைத்தரும்!

## புலனாய்வுத் துறைப்பொறுப்பாளர் பொட்டு அம்மான்



கிளிநொச்சி

பலமே தமிழ்மக்களின் அமைதியான வாழ்வுக்கு வழிகோலும் என புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் தெரிவித்தார்.

கரும்புலிகள் நாளை முன்னிட்டு அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்போரின் ஒரு திருப்புமுனைக்கு உரிய கட்டத்தில் பலமே எமது வாழ்வை நிர்ணயிக்க முடியும், நிர்ணயிக்க வேண்டும் என்ற நம்பிக்கை எழுந்துள்ள நிலையில், தாயகத்தில் பலமாவோம் என்று உங்களைச் சந்திக்கிறோம்.

எமது விடுதலையை, எமது மக்களின் அமைதியான வாழ்வை நிர்ணயிப்பதும், தீர்மானிப்பதும் எமது பலம். எமது பலமே எமது மக்களுக்கான (10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தாயகம் எங்கும் கரும்புலிகளுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் பிரத்தியேக தளமொன்றில் நடைபெற்ற நிகழ்வில் - தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பொதுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய அதே வேளை -

தாயகப் பிரதேசமெங்கும் கரும்புலிகள் நாள் நிகழ்வு எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

யாழ்.பல்கலைக்கழக மாவீரர் நினைவுத் தூபியில் நேற்றுக் காலை 10 மணிக்கு கலைப்பீடமாணவர் ஒன்றியத்தலைவர் சி.புருசோத்தமன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச்சுடரை யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சுடர்களை உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் ரி.இராஜரட்ணம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் சிவானந்தமூர்த்தி, கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி உபஅதிபர் அலோசியஸ் மற்றும் மருத்துவ பீடாதிபதி சிவபாலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை (10 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்ணைக் கொன்றுவிட்டு மானிப்பாயில் நகை திருட்டு!

யாழ்ப்பாணம்

மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீடொன்றில் நுழைந்த கொள்ளையர் - பெண்ணொருவரை கழுத்துநெரித்து கொன்றுவிட்டு அங்கிருந்த பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் உடுவில் - பொன்னையா வீதி, மானிப்பாயைச் சேர்ந்த அம்பலவாணர் புனிதவதி (வயது41) எனும் பெண்ணே கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டவராவர். (10 ஆம் பக்கம் பார்க்க)

# இந்துக்கல்லூரிக்குள் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம்

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருந்த கரும்புலிகள் நாள் நிகழ்வைக் குழப்பும் வகையில் பாடசாலையினுள் அத்துமீறி நுழைந்த படையினர் தேடுதல் நடத்தியதுடன் - பாடசாலை சமுகத்தினரை அச்சுறுத்தி, நிகழ்வைக் குழப்ப முற்பட்டனர். எனினும் கரும்புலிகள் நாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கரும்புலிகள் நினைவுநாள் எழுச்சி நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை கறுப்புத் துணிகளால் முகத்தை மூடியவாறு நாய்கள் சகிதம் உள்ளே நுழைந்த படையினர் பாடசாலை வளாகத்தினுள் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர். மாணவர்களும் கடுமையாகச் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை அச்சுறுத்தி படம் பிடித்துச்சென்றுள்ளனர்.


பாடசாலை மாணவர்கள் ஏற்பாடு செய்த கரும்புலிகள் நாள் நிகழ்வை குழப்பும் (10 ஆம் பக்கம் பார்க்க)




## உலகக் கிண்ணம் - 2006

# இரண்டு அணிகளும்; இரண்டு நிமிடங்களும்







டோர்ட்மண்ட் —

2006 FIFA வில் இத்தாலியை விட, ஜேர்மனி கூடுதலாகவே பேசப்பட்டது. அதுவும் மிகப்பலமான ஜேர்மனி, சுப்பர் டீம் பிரேசிலை வீழ்த்தியதும், ஜேர்மனியே கிண்ணத்தைத் தூக்கும் என்றும் ஊகங்கள் வெளியிடப்பட்டன.

ஆனால் ஜேர்மனிக்கு தன் தாயக மண்ணில் இறுதியாக நடைபெற்ற போட்டிகளில் அந்த இறுதி நிமிடத்துக்காகத்தான் காத்திருக்கிறது போலும்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான இரண்டாவது சுற்றுப்போட்டியில் இறுதி நிமிடப் பெனால்டி இத்தாலியை காலிறுதிப் போட்டிக்கு முன்தள்ளியது. இப்போது இந்த இறுதி இரண்டு நிமிடங்கள் ஜேர்மனியை ஆறாத சோகத்தில் ஆழ்த்திவிட்டு 2:0 என்று இத்தாலி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே இரு அணிகளின் ஆட்டமும் மிக வேகமானதாக அமைந்தது ரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமைந்தது. ஆட்டம் தொடங்க அரை மணி நேரத்துக்குள்ளேயே இத்தாலிக்குக் கிடைத்த இரண்டு FREE KICKS வீணாகின்றன.

அதன்பின்னர் இத்தாலி பெற்றுக் கொண்ட மூன்று கோர்ணர் கிக்குகளையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. முதல் பாதியில் இத்தாலி கூடுதல் ஆதிக்கம் செலுத்தினாலும், கோல் போடமட்டும் மறந்துவிட்டது. ஜேர்மனி அணித் தலைவர் மைக்கல் பலாக் சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தும் குளோஸ், பொட்லொஸ்கி போன்றோர் அவற்றை கோலாக்க முடியவில்லை.



இரண்டாவது அரைப்பகுதியில் நான்கைந்து தடவைகள் இத்தாலிய கோல்கம்பத்தைத் தாண்ட ஜேர்மனி பல சந்தர்ப்பங்கள் பெற்றும் இத்தாலிய கோல்காப்பு வீரர் ஜேர்மனிக்கு எவ்வித கருணையும் காட்ட மறுத்து விட்டார்.


உண்மையில் இத்தாலி பின்கள வீரர்கள் பெரும் தடையாக இருந்தது ஜேர்மனிக்கு பயங்கர வெறுப்பேற்றியிருக்கும். இந்த நிலையில் மேலதிக முப்பது நிமிட நேரம் வழங்கப்பட்டாலும், இந்த ஆட்டம் பெனால்ரி கிக் முறையில்தான் முடியும் என்பது லட்சோப லட்சம் ரசிகர்களின் முடிந்த முடிவாகவும் போய்விட்டது.

ஆனால், இத்தாலிய அணி மட்டும் இத்தனை ரசிகர்களின் எண்ணத்தையும் புறந்தள்ளி இன்னொரு விதமாக யோசித்திருக்கிறது என்பது ஆட்டம் முடிந்தபின்புான் எல்லோருக்குமே புரிந்திருந்தது.

அதாவது பெனால்டி உதை முறையில்தான் முடிவு காணப்படுமென்றால், ஜேர்மனி ஐந்து பெனால்டிகளிலும் அசத்தும் என்பது இத்தாலிக்குத் தெரிந்தே இருந்தது. இதன் காரணமாக முழு களச் செயற்பட்டு வேளையிலேயே ஜேர்மனியின் கதையை முடிக்கவேண்டும் என்று தெளிவாகத் தீர்மானித்துவிட்டது.

இதன் காரணமாகத்தானோ என்னவோ 119 ஆம் நிமிடத்தில் அன்ரியோ பிர்லோ அழகாகப் பாஸ் செய்த பந்தை குரோஸோ கோலாக்கிவிட, அதை நம்பமுடியாத ஜேர்மன் கோல் காப்பு வீரர் லீமன் அதிர்ச்சியில் உறைந்துபோய்விட்டார்.


ஆனால், இத்தாலி சிந்தனையைச் சிதறவிடவில்லை. ஆனால், ஜேர்மனி அதிர்ச்சியில் ஒரு கணம் குழம்பிவிட்டது. அந்த ஒரு கணம் இத்தாலிக்குப் போதுமானதாக இருந்தது. அடுத்த நிமிடம் டெல்பியரோ, லீமனுக்கு வேடிக்கை காட்டியே கோலை



இறக்கிவிட்டார்.

இப்பொழுது டோர்ட்மண்ட் மைதானத்தில் குழுமியிருந்த 65000 ரசிகர்கள், ஜேர்மன் வீரர்கள், பயிற்றுனர் அனைவருமு; விக்கித்துப்போய் அடுத்தகணம் விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டார்கள். உறைந்தவர்கள் உயிர் பெற்றபோது, அங்கு கண்ணீர்த் துளிகள் - மழைத்துளிகள் போல கொட்டத்தொடங்கிவிட்டன.

தன் மண்ணில்தான் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற அந்த நியாயபூர்வமான, தலை நிமிர்ந்தே நின்று எதிர்பார்த்த ஆசையை, இத்தாலியும்கூட நியாய



பூர்வமாகவே சிதறடித்து ஜேர்மனியை குலுங்கிக் குலுங்கி அழவைத்து விட்டது. இத்தாலிய அணியின் குரோஸோவும், டெல்பியரோவும் உலகக் கிண்ண வரலாற்றில் தம் பெயரை நிலையாகவே பொறித்துக் கொண்டார்கள்.

ஜேர்மனி எங்கு பிழைவிட்டது, என்ன பிழைவிட்டது ள்ன்று ஜூர்கன் கிளீன்ஸ்மனுக்கும் விளங்கவில்லை, அணி வீரர்களுக்கும் விளங்கவில்லை. கனவு தகர்ந்தது என்பது மட்டும் விளங்கியது. ஜேர்மனியை இந்த அரையிறுதி ஆட்டத்தில் வீழ்த்தியதன் மூலம் இத்தாலி ஆறாவது முறையாக FIFA கிண்ண இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றிருக்கிறது.

இம்முறை இறுதிப்போட்டிக்கு ஜேர்மனி தகுதிபெற்றிருந்தால் அது எட்டாவது முறையாக இருந்திருக்கும். அதுதான் எட்டாக்கனியாகப் போய்விட்டதே. இம்முறை இத்தாலி உலகக்கிண்ணத்தை வெல்லுமாயின், உலகக்கிண்ணத்தை நான்கு முறை வென்ற ஐரோப்பிய தேசம் என்ற பெயரைத் தட்டிக்கொள்ளும்.

1934, 38, 82, 2006? நடக்குமா இது? பிரான்ஸ் அல்லது போர்த்துக்கல் விட்டுக்கொடுக்குமா? அடுத்த கட்டம் என்ன? அனுபவம் தந்த பாடம் முடிந்தபின் பேசுவோம் சரிதானே!

# ஒரு தோல்வி முடிவல்ல

ஜேர்மன் சக்கரவர்த்தியை ஜேர்மன் மொழியில் கெய்ஸர் என்பார்கள். முன்னாள் ஜேர்மன் அணித் தலைவர், இன்னாள் 2006 ஜேர்மனி உலகக்கிண்ண ஏற்பாட்டாளர் குழுத் தலைவர் இவர் தான் பிரேன்ஸ் பெக்கன்பேர். இவரை ஜேர்மனியர் கெய்ஸர் என்று தான் மிகுந்த மதிப்புடன் அழைப்பார்கள்.

அரையிறுதி ஆட்டத்தில் 2:0 என்று இத்தாலியுடன் ஜேர்மனி தோல்வியை சந்தித்த பின்னர் கருத்து வெளியிட்ட பெக்கன்பேர்- தற்போதைய பயிற்றுனர் ஜீர்கன் கிளீன்ஸ்மன் தொடர்ந்தும் ஜேர்மன் அணியின் பயிற்றுனராக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். அவர் அணியில் மிகச்சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியவர். ஜேர்மனி சிறப்பாகவே விளையாடியது. இதேவேளை, இத்தாலி சிறப்பாகவும் சிறிது உத்வேகத்துடனும் விளையாடினார்கள். அதுவே வித்தியாசம் என்கிறார்.




200 6உடன் ஜேர்மனியுடனான ஒப்பந்தம் கிளீன்ஸ்மனுக்கு முடிவடைகிறது. இவரைத் கொத்திக் கொண்டு போக ஐக்கிய அமெரிக்க உதைபந்தாட்டச்சபை காத்துக்கொண்டிருக்கிறது. இதேவேளை, கிளீன்ஸ்மன் பெக்கன்பேர் எதிர்மறையான கருத்துக்களையே கொண்டிருந்தவர் ஜேர்மனி உலகக்கிண்ணப் போட்டிகளின் இடைநடுவில் வெளியேற நேர்ந்தால், உடனடியாக கிளின்ஸ்மனுக்கு பதிலாக இன்னொரு பயிற்றுனரை நியமிக்கவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்தவர் இப்போது கிளின்ஸ்மனுக்கு சாதகமாகப் பேசுகிறார். ஏனெனில், கிளின்ஸ்மன் ஜேர்மன் அணியை அந்தளவு பலமான அணியாக மாற்றிவைத்திருந்தவர். கிளீன்ஸ்மன் ஜேர்மனியராக இருந்தும் கலிபோர்னியாவில் வாழ்ந்து வந்தமை பலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது உண்மைதான்.

இந்தவகையில் பெக்கன்பேரின் கருத்தும் ஜேர்மனிய உதைபந்தாட்ட சபையின் எடுபடும் சாத்தியக் கூறுகள் அதிகம். அப்படியாயின் கிளின்ஸ்மனும் ஜேர்மனிக்கு மீண்டும் வந்து பதவியை ஏற்றுக் கொண்டால், 2008 யூரோ கிண்ணம், 2010 உலகக் கிண்ணம் இரண்டும் ஜேர்மன் அணிக்கு சாதகமாக அமையக்கூடிய சந்தர்ப்பங்கள் கூடுதலாகவே காணப்படும்.

# உணர்ச்சி வேகம் வெறுப்பல்ல

காய்த்த மரம்தான் கல்லெறிபடும். இதற்கு றொனால்டினோ மட்டும் விதிவிலக்காக முடியுமா? பிரேசில் மக்களின் உயிர்மூச்சு உதைபந்தாட்டம்தான். அதில் சந்தேகமில்லை. அதற்காக கால்இறுதிப் போட்டியில் பிரான்ஸிடம் தோல்விகண்டமைக்காக இவருக்கு பிரேசில் மக்கள் கொடுக்க நினைக்கும் தண்டனை என்பது கொஞ்சமும் சரியல்ல.




2004 இல் FIFA இன் சிறந்த உதைபந்தாட்ட வீரராக றொனால்டினோ தெரிவு செய்யப்பட்ட போது - பிரேசில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இந்த மகிழ்ச்சியின், நன்றியின் ெவெளிப்பாடுதான் பிரேசிலின் சான்ரா கதரீனா மாநிலத்தில் ஏழு மீற்றர் உயரத்தில் இவருக்கு ஒரு சிலையை வைத்தார்கள்.


தற்போது பிரேசில் அணி, பிரேசில் ரசிகர்களை ஏமாற்றிய கோபத்தை றொனால்டினோவின் சிலை மீது காட்டியிருக்கிறார்கள். அந்தச் சிலையை தகர்த்து, தீவைத்து கருக்கியிருக்கிறார்கள்.

இப்படித் தண்டனை வழங்கப்பட றொனால்டினோ செய்த தவறு என்ன? தனக்கு வந்த சந்தர்ப்பங்களைக்கூட, வாய்ப்பு நிச்சயம் கூடுதலாக இருக்கும் வீரருக்கு திட்டமிட்டு அணியின் முதன்மையை மட்டும் கருத்தில் கொண்டு விளையாடியது தவறா அல்லது, எவ்வளவு தூரத்துக்கு முட்டாமல், மோதாமல், முரட்டு ஆட்டம் ஆடாமல், நாகரிகமாக விளையாடலாம் என்று முயன்று விளையாடினாரே அது தவறா?

அல்லது எந்த நிலையிலும் முகத்தில் புன்னகை மாறாது விளையாடி ரசிகர்ளின் கருத்தைக் கவர்ந்தாரே இது தவறா? இவையெல்லாம் தவறென்றால் பிரேசில் ரசிகர்கள் இவரது சிலையை தகர்த்தது சரி. அப்படியில்லாவிட்டால், பரவாயில்லை. றொனால்டினோவுக்கு பிரேசில் தவிர்த்தும்கூட, உலகம் முழுவதும் மில்லியன் மில்லியனாக ரசிகர்கள் இருக்கிறார்கள். என்றாலும், உணர்ச்சிக் கதம்பம் என்றழைக்கப்படும் பிரேசில் ரசிகர்கள் நாளையே எம்முடன் இணைந்து கொண்டு றொனால்டினோவுக்கு ஆதரவு கொடுக்கத் தொடங்கிவிடுவார்கள்.

# அதிகரிக்கும் வன்முறையை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இந்திய வெளியுறவு செயலர் தெரிவிப்பு



கொழும்பு –

இலங்கையில் அதிகரித்திருக்கும் வன்முறைச் சூழலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுச் செயலர் சியாம் சரண் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்தியப் பிரதமரின் சில விசேட செய்திகளை இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பதற்காகவே இலங்கை வந்தேன். இலங்கையில் வன்முறை அதிகரிப்பதை இந்தியா கண்டிக்கிறது.

போர்நிறுத்த உடன்படிக்கையை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, அரசியல் ரீதியான தீர்வைக் காண்பதற்கான பேச்சுக்களும் ஆரம்பிக்கப் படவேண்டியது அவசியம் என்பதே இந்தியாவினதும், சர்வதேசத்தினதும் விருப்பமாகும்.

இனப்பிரச்சினைக்கு ஒருமித்த நிலைப்பாட்டை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் கொண்டிருக்க வேண்டும். அதற்கான ஒழுங்குகளை இந்தியா மேற்கொள்ளவெண்டும் என ஜனாதிபதி மகிந்த என்னிடம் கேட்டுக் கொண்டார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இந்திய வெளிவிவகார செயலாளர் சியாம்சரண் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

ரணிலின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் –


இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா உதவுவது குறித்து ரணிலிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவைப் போன்ற ஒரு கூட்டாட்சி அரசாங்க முறையை உருவாக்க தென்னிலங்கையில் ஒருமித்த கருத்து ஏற்படுமானால் இந்தியா உதவத் தயாராக இருப்பதாகவும் சியாம் சரண் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் கூட்டாட்சி முறைக்கு தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் ஒப்புக்கொண்டிருந்ததாகவும் இந்தச் சந்திப்பில் சியாம் சரணிடம் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், அரசியல் விவகார செயலாளர் என்.கில், ஐக்கிய தேசியக் கட்சியின் மிலிந்த மொறகொட, ஜி.எல்.பீரிஸ் மற்றும் கரு ஜயசூரிய ஆகியோர் இந்தச் சந்திப்பின்போது உடனிருந்தனர்.

# பொதுக்கணக்குகள் குழுத் தலைவராக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்



கொழும்பு –

இலங்கையின் பொதுக்கணக்குகள் குழுத் தலைவராக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹக்கீம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வி.புத்திரசிகாமணி முன்மொழிந்தார். அவரைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை வழிமொழிந்தார்.

பொதுக்கணக்குகள் குழுத் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவேண்டும் என்று முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி வலியு றுத்தி இருந்தது.

கடந்த 2004 ஆம் ஆண்டும் பொதுக் கணக்குகள் குழுத் தலைவர் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் இளைஞர் மத்துகமவில் கைது

கொழும்பு –

மத்துகம – அக்குரஸ்ஸவில் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இந்த இளைஞரை 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்திய மீனவர்கள் கைது

கொழும்பு –

கற்பிட்டி கடற்பரப்பில் நுழைந்த இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு கற்பிட்டி கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த தூத்துக்குடியைச் சேர்ந்த 10 மீனவர்களும் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த மீனவர்களைத் தமது சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக புத்தளம் நீதிவான் தெரிவித்தார்.

# மூதூரில் வதந்தியை அடுத்து பாடசாலைகள் மூடப்பட்டன!

திருகோணமலை –

திருகோணமலை – மூதூரில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் ஊடுருவியிருப்பதாகப் பரவிய வதந்தியை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை பரவிய இந்த வதந்தியால் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை பெற்றோர் வீடுகளுக்குக் கூட்டிச் சென்றனர்.

மாணவர்கள் வெளியேறியதால் காலை 11 மணியுடன் பாடசாலைகள் மூடப்பட்டதுடன், வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச் காரியாலயங்களிலும் இந்த வதந்தியால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

# குலதுங்கவின் பாதுகாப்பு குறைபாடு விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து



கொழும்பு –

இராணுவத்தின் மூன்றாம் நிலை தளபதி லெப்.ஜெனரல் பரமி குலதுங்கவுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியதாவது –

பரமி குலதுங்க கொல்லப்பட்ட சம்பவத்தில் பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப் பட வேண்டும்.

குலதுங்கவுக்கு ஏன் இராணுவக் குடியிருப்பில் இடம் ஒதுக்கப்படவில்லை? அவரின் மரணம் எமது மதத்துக்கும் நாட்டுக்கும் பாரிய இழப்பு, இந்த நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டினது சுதந்திரத்துக்காகவும் குலதுங்க தன்னை தியாகம் செய்தார்.

அவரது மூத்த சகோதரி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், பரமி குலதுங்கவின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடு இருந்ததாகக் கூறினார்.

இது தொடர்பாக, அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும்.

எல்லையோரக் கிராமங்களிலுள்ள மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். நாட்டின் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் அரசாங்கமும், அரச ஊடகங்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# கைக்குண்டு மீட்பு

கொழும்பு –

கொழும்பு றீகல் திரையரங்குக்கருகில் நேற்றுமுன்தினம் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

திரையரங்கின் நுழைவுச்சீட்டு விநியோகம் செய்யப்படுகின்ற பகுதியில் இராணுவச் சீருடையில் சுற்றப்பட்ட நிலையில் இருந்த கைக்குண்டு மீட்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பிரதேசத்தில் பதற்ற நிலை காணப்பட்டது. அங்கு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிலாபம் கடற்கரையில் பாரிய குண்டு மீட்பு!

புத்தளம் –


புத்தளம் – சிலாபம் கடற்கரைப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை பாரிய வெடிகுண்டொன்று சிலாபம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு 6 மணியளவில் கரை ஒதுங்கிய இந்த வெடி குண்டை கண்ட மீனவர்கள் புத்தளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குண்டு செயலிழக்க வைக்கப்பட்டது. மீட்கப்பட்ட வெடிகுண்டு சுமார் ஆறு கிலோ எடையுள்ளது என புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்தக் குண்டு – கற்பிட்டிக்கும் கொழும்புக்கும் இடையில் பயணித்துக் கொண்டிருந்த வேளை கவிழ்ந்து விழுந்ததாகக் கூறப்படும் படகிலிருந்த குண்டாக இருக்கலாமென பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

# பங்களாதேஷ் தளபதியுடன் நந்த மல்லவராச்சி சந்திப்பு



கொழும்பு –

ஒரு வார கால நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருக்கும் பங்களாதேஷ் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஹசன் அலி கான் நேற்று முன்தினம் இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராய்ச்சியைச் சந்தித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்புகள் மற்றும் உதவிகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது இராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் சுனில் சில்வாவும் கலந்து கொண்டார்.

# புலிகளின் ஆதரவு அமைப்புகளை தடை செய்ய வேண்டுமாம்!

## பேர்னார்ட் குணதிலக கோருகிறார்

கொழும்பு –

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகளையும் தடை செய்ய வேண்டும் என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னார்ட் குணதிலக வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்ரன் நகரில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் பேசியதாவது –

1992 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்துள்ளன.

எனினும் விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்புக்கள் இன்னும் பல நாடுகளில் இயங்குகின்றன. உலகத் தமிழர் கழகம், உலகத் தமிழர் இயக்கம், கனேடிய தமிழர் கூட்டமைப்பு போன்றவை விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி செய்து வருகின்றன.

இந்த அமைப்புகளையும் அந்தந்த நாடுகள் தடைசெய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாண மட்டத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றம்

கொழும்பு –

மாகாண மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் அத்தாவுட செனிவிரத்ன தெரிவித்தார்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட வழக்குகள் விசாரணை செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு மாகாண மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்கவேண்டும்.

மாகாண மட்டத்தில் இத்தகைய நீதிமன்றங்களை அமைப்பதன் மூலம் கிராமங்கள் அதிகளவு நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியும். இளம் வழக்கறிஞர்கள் தமது தொழிலையும் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். அரசியல் யாப்பு தொடர்பாக நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# லக்மல் சம்பத் படுகொலை; அரசு மீது ஐ.தே.க கண்டனம்



கொழும்பு –

சிங்கள ஊடகவியலாளரான லக்மல் சம்பத் படுகொலை தொடர்பாக அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாகக் கூறியதாவது –

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் அவசியம் மேற்கொள்ள வேண்டும். லக்மல் சம்பத்தை கொலை செய்த கொலையாளிகளை நீதியின் முன்நிறுத்த வேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாத்து ஒரு ஒழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற ஜனாதிபதி மகிந்தவின் தேர்தல் வாக்குறுதியை அவர் நிறைவேற்றவேண்டும்.

பாடசாலைகளில் வெடிகுண்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்ட வதந்திகளுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி மீது அரசாங்கம் குற்றம்சாட்டாமல் அரச ஊடகங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதை கற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு நடைபெற்ற ஓவியப் போட்டி முடிவு

கிளிநொச்சி

கரும்புலிகள் நாள் நிகழ்வை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்புதேசய மற்றும் வலய மட்டத்தில் நடத்திய மாணவர்களுக்கிடையிலான ஓவியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டது.

**தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் பின்வருமாறு**

**பிரிவு** - I (7,8,9,10ம் தரத்துக் குரியது) 1ஆம் இடம் - செ.சிவதீஸ்வரன் - ஒலுமடு தமிழ் வித்தியாலயம், 2 ஆம் இடம் - கா.துஸ்யந்தன், முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை, 3 ஆம் இடம் - ம.றொக்சன், தளையடி றோ.க.பாடசாலை, 4 ஆம் இடம் - வி.மேர்வின் வினோதன், அக்கராயன் ம.வித்தியாலயம், 5 ஆம் இடம் -கி.கருணதாஸ், கனகராயன் மகாவித்தியாலயம்.

**பிரிவு** - II (10,11 ஆம் தரத்துக் குரியது) 1 ஆம் இடம் - அ.ஜெயவினோதன் - உடுத்துறை மகாவித்தியாலயம்,2 ஆம் இடம் - சி.அருண்சன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் - சி.தனுசியன், மாங்குளம் மகாவித்தியாலயம்,4 ஆம் இடம் - செ.லோசன், கனகாம்பிகைக் குளம் மகாவித்தியாலயம், 5 ஆம் இடம் - சி.சுகந்தன், நெடுங்கேணி மகா வித்தியாலயம்.

**பிரிவு** - III (12,13 ஆம் தரத்துக் குரியது) 1 ஆம் இடம் - சீ.முகுந்தன் முல்லைத்தீவு மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - கோ. நந்தசொருபன், அக்கராயன் மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் - க.கஜன், யாழ்.உடுத்துறை மகாவித்தியாலயம், 4 ஆம் இடம் - க.நிசாந்தன், மாங்குளம் மகாவித்தியாலயம்.

**வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் பின் வருமாறு**

*முல்லைத்தீவு வலயம்*

**பிரிவு** -I (7,8,9 ஆம் தரங்களுக்குரியது) 1 ஆம் இடம் - கா.துஸ்யந்தன் , கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை, 2 ஆம் இடம் - இ.மீரா, உடையார்கட்டு மகாவித்தியாலயம், 3ஆம் இடம் - த.தட்சணப்பிரியா, கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை, 4 ஆம் இடம் - கே.சுபர்ணா, புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை, 5 ஆம் இடம் - ஜெயஸ்ரியன், மந்துவில் அரசரெட்ணம் வித்தியாலயம்.

**பிரிவு** - II (10,11 ஆம் தரங்களுக் குரியது) 1ஆம் இடம் -நி.அருணசன், புதுக்குடியிருப்பு,மத்திய கல்லூரி, 2ஆம் இடம் -சி.அனுசியா, வள்ளிபுனம் அ.த.க பாடசாலை, 3 ஆம் இடம் - நியூசிகா, உடையார் கட்டு மகாவித்தியாலயம், 4 ஆம் இடம் - சி.கஜீபன் , புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, 5 ஆம் இடம் - ம.சி.ஜெனி போஸ், முல்லைத்தீவு. மகாவித்தியாலயம்.

**பிரிவு** -III (12,13ஆம் தரங்களுக் குரியது) 1ஆம் இடம் - சீ.முகுந்தன் - முல்லைத்தீவு மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - சி.நிஷாந்தன், உடையார்கட்டு மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் - சி.யசோதாரணி, உடையார் கட்டு மகாவித்தியாலயம், 4ஆம் இடம் - ச.பிரதீபன், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், 5ஆம் இடம் - ஞா.யூலி, உடையார்கட்டு மகாவித்தியாலயம்.

*துணுக்காய் வலயம்*

**பிரிவு** I - 1ஆம் இடம் செ.சிவதீஸ்வரன், ஒலுமடு தமிழ் வித்தியாலயம், 2ஆம் இடம் - சி.யதினி, பாலிநகர் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் - கே.வித்தியாதரன், அனிஞ்சியன் குளம் அ.த.க பாடசாலை, 4 ஆம் இடம் - ம.கோபுனங்கர், அனிஞ்சியன் குளம் அ.த.க பாடசாலை, 5 ஆம் இடம் - எஸ்.கோபிநாத், பாலிநகர் மகாவித்தியாலயம்.

**பிரிவு** II - 1 ஆம் இடம் த.தனுசியன், மாங்குளம் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - பெ.பிரதீபன், முறிகண்டி இந்து வித்தியாலயம், 3 ஆம் இடம் - வி.ஜெயக்காந், மாங்குளம் மகாவித்தியாலயம், 4 ஆம் இடம் - டேவிற் யேசுராஜா, மாங்குளம் மகா வித்தியாலயம், 5 ஆம் இடம் - ந.விஜிதரன் பாலிநகர் மகாவித்தியாலயம்.

**பிரிவு** III - 1 ஆம் இடம் - த.நிஷாந்தன், மாங்குளம் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - ந.ரூபன்ரன், மாங்குளம் மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் - சி.ஜிதா, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்.

*கிளிநொச்சி வலயம்*

**பிரிவு** I - 1 ஆம் இடம் - இ.மேவின் வினோதன், அக்கராயன் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - செ.அஜந்தன், அக்கராயன் மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் - க.கீர்த்தனா, அக்கராயன் மகாவித்தியாலயம், 4ஆம் இடம் - ந.ரஜீபன், அக்கராயன் மகாவித்தியாலயம், 5ஆம் இடம் - த.அனோஜன் - அக்கராயன் மகாவித்தியாலயம்.

**பிரிவு** - II 1ஆம் இடம் - செ.வேனசன், கனகராயன்குளம் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - இ.சாந்தரூபன் அக்கராயன் மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் - பி. சுகீர்தா, கிளிநொச்சி மத்திய கல்லூரி, 4 ஆம் இடம் - பா.இலக்கணா, கனகாம்பிகை குளம் மகாவித்தியாலயம், 5 ஆம் இடம் - ஜெ.ஜெயராஜன், உருத்திரபுரம் மகா வித்தியாலயம்.

**பிரிவு** - III 1ஆம் இடம் கோ.நந்தசொரூபன், அக்கராயன் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - இ.துவாரகா, தருமபுரம் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் - மொ.சதாசிவம், கனகபுரம் மகாவித்தியாலயம், 4 ஆம் இடம் - சிவகணேசன், கிளிநொச்சி மத்திய கல்லூரி.

## காற்றால் வீழ்த்தப்பட்ட சுனாமி அனர்த்த வீடு

முல்லைத்தீவு

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வடக்கில் - அமைக்கப்பட்ட வீடு காற்றினால் அடித்து வீழ்த்தப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கள்ளப்பாடு தீத்தக்கரை வடக்குக் கிராமங்களில் தற்காலிகமாக வீடுகளை அமைக்கும் பணியில் போரூட் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகளில் ஒன்றே தற்போது வீசிய காற்றால் அடித்து வீழ்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கரைவலை மீன்பிடி தொகுதிகள் கையளிப்பு

கிளிநொச்சி

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பத்து மீனவர்களுக்கு கரைவலை மீன்பிடித் தொகுதிகள் கையளிக்கப்பட்டன.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கரைவலைத் தொகுதிகள் முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

இந்தக் கரைவலைத் தொகுதிக்ளை ஒக்ஸ்பாம் நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் சமாசப் பிரதிநிதிகள் கையளித்தனர். (கு)

## பாதணிகள் வழங்கல்

வட்டக்கச்சி

அக்கராயன் பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களில் - அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் முன்பள்ளிகளிலுள்ள 202 சிறார்களுக்கு ‘சோஆ’ நிறுவனத்தின் உதவியுடன் 202 சோடி பாதண்ணிகள் வழங்கப்பட்டன.

இதேபோன்று ஏனைய முன்பள்ளிச் சிறார்களுக்கும் வழங்கப்படவுள்ளன. (09)

## நாகபாம்பு தீண்டிய குழந்தை வைத்தியசாலையில் அனுமதி

வட்டக்கச்சி

நாகபாம்பு தீண்டிய குழந்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கணேசபுரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் க.டிலூசன் (வயது 02) என்ற குழந்தையே நாகபாம்பினால் தீண்டப்பட்டதாகும்.

கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் குறித்த குழந்தை வீட்டில் உறக்கத்தில் இருந்த வேளையே நாகபாம்பு தீண்டியுள்ளது.

வீட்டினுள்ளிலிருந்து நாகபாம்பு வெளியே வருவதை அவதானித்த குழந்தையின் தந்தை வீட்டினுள் குழந்தை அழுவதைக் கேட்டு உள்ளே சென்று பார்த்த போது குழந்தை நாகபாம்பால் தீண்டப்பட்டதைக் கண்டு உடனடியாகவே கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (09)

## காலாவதியான பொருட்கள் பூநகரியில் அழிக்கப்பட்டன

வட்டக்கச்சி

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் பகுதியில் பல்பொருள் வாணிபங்கள், தேனீர்ச்சாலை, உணவகங்கள், அரிசி ஆலைகள், வெதுப்பகங்கள், ப.நோ.கூ.சங்கங்கள் என்பன சுகாதார சேவையினரால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டவேளை கண்டுபிடிக்கப்பட்ட காலாவதியான உணவுப் பொருட்கள், ரின் மீன், கடலை, பிஸ்கட், உப்பு, யம்போ நட்ஸ்,மிளகாய்த்தூள் போன்ற பெரும்தொகையான பொருட்கள் அழிக்கப்பட்டன. (09)

## இரண்டு சடலங்கள் கரை ஒதுங்கின

மன்னார்

மன்னார் - கடற்கரைப் பிரதேசத்தில் இரண்டு சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாச்சிக்குடா பகுதியில் - இராணுவ சீருடையுடன் ஒரு சடலமும் தாழ்வுபாடு பகுதியில் மிகவும் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

இராணுவச் சீருடையில் கரையொதுங்கிய சடலம் இதுவரை அங்கிருந்து மீட்கப்படவில்லை எனவும் மற்றைய சடலம் மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மோ)

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பு

கிளிநொச்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளை விருத்தி செய்யும் நோக்குடன் பிரதேச ரீதியாக கால்நடைகள் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன.

கால்நடைகளை விருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு பெருமளவிலான உணவையும், வருமானத்தையும் பெறும் நோக்கில் இந்தச் செயற்பாடு அமைவதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிவலோகநாதன் குளமும், குமுழமுனைப் பிரதேசத்தில் தண்ணிமுறிப்பும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (கு)

## இரண்டு தமிழ் பெண்கள் வவுனியாவில் கைது

வவுனியா

வவுனியா - வேப்பங்குளத்தில் இரண்டு தமிழ்ப்பெண்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

மகாரம்பைக்குளத்தில் தங்களது வீட்டுப் பதிவு தொடர்பாக செட்டிக்குளத்துக்குச் சென்றுவிட்டு திரும்பிய பரமேஸ்வரி ஜெயசங்கர் (வயது - 32) மற்றும் இந்திராணி செல்வம் (வயது -40) ஆகியோரை விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறி இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

பரமேஸ்வரியின் கையடக்கத் தொலைபேசியில் விடுதலைப் புலிகளின் தொலைபேசி எண் இருந்ததாகவும் அதனால் அவருக்கு புலிகளுடன் தொடர்பிருப்பதாகவும் கூறி இராணுவத்தினர் கைது செய்து கடந்த திங்கட்கிழமை இரவு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.





கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் சிரமதானப் பணியை மேற்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள் சீலன்)

## முன்பள்ளிகளுக்கிடையிலான இல்ல மெய்வல்லுனர் போட்டி

கிளிநொச்சி

முல்லைத்தீவு - சிலாவத்தை டில்லி, குஞ்சன் முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை சிலாவத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.கமலேஸ்வரி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் மேஜர் தங்கேசின் தந்தையார் ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் ஒலிம்பிக் தீபத்தை முல்லை மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாக இணைப்பாளர் செல்வி ஏற்றினார்.

இதன் பின்னர் விளையாட்டு நிகழ்வை மாவீரர் வீரவேங்கை நிமலனின் தாயார் ஆரம்பித்து வைத்தார்.

நிறைவாக வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (கு)

## மருதங்கேணி பிரதேசத்தில் விலங்கு விசர் நோய் தடுப்பூசி

வட்டக்கச்சி

மருதங்கேணிப்பிரதேசத்தில் நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. இதன்படி முதற்கட்டமாக 250 நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது.

அத்துடன் கடந்த 21ஆம் திகதி கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் செயற்பாட்டில் 16 நாய்கள் அழிக்கப்பட்டன. இதேபோன்று மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, கட்டைக்காடு, செம்பியன்பற்று, மாமுனைப் பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (09)

# 2 பெண்களைக் காணவில்லை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

வலிகாமம் - உரும்பிராய் கருணை இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த இரண்டு இளம் பெண்கள் காணாமல் போயுள்ளனர். கடந்த மாதம் 26 ஆம் திகதி இவர்கள் இருவரும் காணாமல் போயிருந்தபோதும், இது குறித்து மூன்று நாட்களுக்குப் பின்னரே உறவினர்களிடம் கருணை இல்ல நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர்.

இவர்கள் இருவரையும் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் பயனளிக்காத நிலையில் கோட்டைக்காடு - மல்லாகத்தைச் சேர்ந்த சிவகுருநாதன் சித்திரா (வயது 16) என்பவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

# நயினை நாகபூஷணி தேர்த்திருவிழா விசேட பஸ் சேவைகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறுவதையிட்டு போக்குவரத்துச் சபை விசேட பஸ் சேவைகளை நடத்தவுள்ளது.

இதன்படி தேர்த் திருவிழாவில் பக்தர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக நாளை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை 20 பஸ்கள் குறிகாட்டுவானுக்கும் - யாழ்ப்பாணத்துக்குமிடையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த பஸ்சேவை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து அரை மணித்தியாலத்துக்கு ஒரு சேவையென மாலை ஆறு மணிவரை நடைபெறவுள்ளது.

இதேவேளை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும், நயினாதீவு இறங்குதுறைக்கும் இடையிலான படகுச் சேவைக்கு ஐம்பது படகுகளுக்கு கடற்படை அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வல்வெட்டித்துறை மக்களை படம் பிடித்த படையினர்!

வல்வெட்டித்துறை —

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியை நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென சுற்றிவளைத்த படையினர் அந்தப் பகுதி மக்களைப் படம் பிடித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் ஆதிகோவிலடிப் பகுதியை சுற்றி வளைத்த படையீனர் - மக்களை வெளியேறாது தடுத்து நிறுத்தி தேடுதல் நடத்தினர். இதன்போதே அந்தப் பகுதி மக்களை படம் பிடித்ததாகத் தெரியவருகிறது.

# வெளிநாட்டிலுள்ளோரின் குடும்பங்களுக்கு வீடுகள்

யாழ்ப்பாணம் —

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதி பெற்று வெளிநாடுகளில் பணிபுரிபவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும், வீடமைப்பு அகதிகள் கூட்டுத்தாபனமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் மனிதவள அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அனுப்பவும்.

வெளிநாடுகளில் பணிபுரிபவர்களுக்கு பதிலாக குடும்பத்தில் ஒருவர் விண்ணபத்தை பூர்த்தி செய்து அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

ஐ.பி.எம்.எஸ் நிறுவனத்தின் அனுசணையுடன் இந்த ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வழிகாட்டற் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் உயர்தரப் பரீட்சைக்குப் பின்னரான உயர் கல்வி பற்றிய விளக்கங்களும், அவற்றுக்கான வாய்ப்புகள் பற்றியும் கருத்துக்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் கல்வி வலயத்தைச் சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இந்தக் கருத்தரங்கு கடந்த 24 ஆம் திகதி நடைபெறவிருந்த போதிலும், பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வருடாந்த மஹோற்சவம்

வடமராட்சி —

கரணவாய் தெற்கு வெற்றிகூடல் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

ᴓᴓᴓ

வடமராட்சி —

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் - கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

### வருடாந்த திருநாள்

கொக்குவில் —

பச்சிலைப்பள்ளி பிரதேச புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் இன்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

தாளையடி பங்குத்தந்தை ஜே.பி. அன்ரனி அடிகளார் வழிபாடுகளை நெறிப்படுத்தி திருப்பலிகளை ஒப்புக் கொடுப்பார்.

நாளை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து சுற்றுப்பிரகாரமும் இடம் பெறும்.

நாளை மறுதினம் காலை 7 மணிக்கு திருநாள் பாடல் திருப்பலி ஒப்புக்கொடுத்தலைத் தொடர்ந்து புனிதரின் சொரூப தேர்ப்பவனி நடைபெறும்.

இறுதியாக சொரூப ஆசீர் வழங்கலுடன் வருடாந்த கொண்டாட்டங்கள் நிறைவுபெறும். (206)

### பொதுமண்டபம் அமைப்பு

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை - இன்பருட்டி கிராமத்தில் பலநோக்கு பொது மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது.

தற்போது இந்தக் கட்டடத்துக்கான வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திருத்தம்

நேற்றையதினம் இதே பக்கத்தில் வெளியான புகைப்படம் தொடர்பான விளக்கச் செய்தியில் ஹற்றன் நஷனல் வங்கி என்பதற்குப் பதிலாக தேசிய சேமிப்பு வங்கி எனத் தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது.

அதனைத் திருத்தி வாசிக்கவும்.

# தாய் சேய் சிகிச்சை நிலையம் சில்லாலையில் திறந்துவைப்பு



யாழ்ப்பாணம் —

வலி.தென் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சில்லாலை பகுதியில் தாய் - சேய் நலன் கருதி தாய் - சேய் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர். சிவகணேசன், பண்டத்தரிப்பு கிராமிய வைத்திய அதிகாரி திருத்தேவி, பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் நிர்மலகாந்தன் மற்றும் மேற்பார்வை குடும்ப நலசேவை உத்தியோகத்தர் எஸ்.சிவா, குடும்ப நலசேவை உத்தியோகஸ்தர்கள், சமாதான நீதிவான், எஸ்.ஜோசப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர். சிவகணேசன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்க, சமாதான நீதிவான் எஸ்.ஜோசப் நாடாவை வெட்டி நிலையத்தை திறந்து வைத்தார்.

# கற்பித்தல் திறனை அதிகரிக்கும் போட்டி

யாழ்ப்பாணம் —

மாணவர்களின் கல்வியை முன்னேற்றும் வகையில் யாழ். மாவட்டத்திலுள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனம் உருவாக்கும் திறனை ஏற்படுத்துவதற்கான போட்டி நடத்தப்படவுள்ளது.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு வழிசெய்யும் வகையில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் கற்றல், கற்பித்தல் உள்ளீட்டு மூலவள நிலையம் இம்முறையும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக் கான கற்பித்தல் சாதனங்களை உருவாக்கும் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் பங்கு பற்றலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# உயிர்காப்பு அங்கிகளை பக்தர்களுக்கு வழங்கவேண்டும்

## படகு உரிமையாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் உற்சவத்தில் கலந்து கொள்ளச் செல்லும் பக்தர்களுக்கு உயிர்காப்பு அங்கிகளை வழங்க அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென படகு உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் மோட்டார் படகில் செல்லும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு உயிர்காப்பு அங்கிகள் வழங்கப்பட வேண்டும் என யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற ஆலய நிர்வாக கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட போதும் இது வரை அங்கிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, படகு உரிமையாளர்கள் அதிகளவு பக்தர்களை ஏற்றிச் செல்வதால் படகுகள் நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்படுகிறது.

இதனால் பக்தர்கள் அச்சத்துடன் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சி.சஹீர்
முகவரி : அல்வாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------


முகவரி ----------------

பிறந்த ஆண்டு : ----------------

கூப்பன்கள் பத்தும்,
புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்



இந்து சமய கலாசார திணைக்களத்தால் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் அபிவிருத்தி உதவியாளர் ரி.பிரதீஸ்வரன் உரையாற்றுவதையும், கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (82)

# விடுதலைப் புலிகளைத் தவிர்த்துவிட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

## வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர



கொழும்பு —

விடுதலைப் புலிகளைத் தவிர்த்துவிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது. நாம் விரும்பியோ, விரும்பாமலோ விடுதலைப் புலிகள் இந்தப் பிரச்சினையில் ஒரு பங்கேற்பாளர்கள்தான். எனவே அவர்களைத் தவிர்த்துவிட்டு நாம் செல்ல முடியாது. ஆனால், நாம் முன்வைக்கும் தீர்வை விடுதலைப் புலிகள் நிராகரிக்கும்போது நாம் நேரடியாகத் தமிழ் மக்களிடம் தான் செல்ல வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை தொடர்பாகக் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

பொருளாதார, இராணுவ விடயங்களில் இந்தியா - இலங்கைக்குச் சார்பாகவுள்ளது. இலங்கை விடயத்தில் இந்தியா சிறிது எச்சரிக்கையுடன் செயற்படுவதற்கு நியாயமான காரணம் உள்ளது.

எமது நாட்டுக்காகத் தங்களது இராணுவத்தினரை அவர்கள் இழந்துள்ளனர். அவர்கள் இங்கிருந்து முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டனர். இலங்கை விடயத்தில் இந்தியா விலகியிருப்பதற்கு நியாயமான காரணங்கள் அவர்களுக்கு உண்டு. ஆனால், இலங்கைக்கு உதவு வதற்கு அந்த இடைவெளி தடையாக இல்லை.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் இராணுவ விடயங்களில் எமக்குச் சாதகமான நிலையில் இந்தியா உள்ளது.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதில் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம். போரின் மூலம் தீர்வு காண்பது சரியான வழி அல்ல என்பதை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளோம். தென்னிலங்கையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் எமது முயற்சியை இந்தியா பாராட்டியுள்ளது.

ஜெயவர்த்தன, பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகிய அனைவருமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்தனர். ஆனால் என்ன நடந்தது. தென்னிலங்கையில் ஒருமித்த கருத்து உருவாக்கப்படாததால் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

நாம் இப்போதும் பேச்சுக்களுக்கு வருமாறு கேட்டுக்கொண்டுள்ளோம். விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். விடுதலைப் புலிகள் மறுக்கும் போதும், தமிழ் மக்களின் நியாய பூர்வமான முறைமைகளுக்குத் தீர்வு ஏற்படுத்தவுள்ளோம்.

தென்னிலங்கைப் பகுதியில் 53 வீத தமிழர்கள் வாழ்கின்றனர். விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் ஏழ்மையான நிலையுள்ளது. முழுமையான அரசியல் உரிமை பெற்ற இனமாகத் தமிழர்கள் உள்ளனர். விடுதலைப் புலிகள் பகுதிகளில் கட்டாயவரி அறவிடல் மேற்கொள்ளப்படுகிறது. சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுகின்றனர். விடுதலைப் புலிகளின் கங்காரு நீதிமன்றங்களில் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஒவ்வொரு முறையும் ஐக்கிய தேசியக் கட்சி எம்மிடமிருந்து விலகி இருந்தது. ஆனால், இந்தமுறை அரசியல் விளையாட்டுக்களை மேற்கொள்ள மாட்டோம் என்று அந்தக் கட்சியின் தலைமை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காகப் போராடவில்லை என்பதைச் சர்வதேச சமூகம் இப்போது உணர்ந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் சொந்தச் செயற்திட்டத்துக்காகப் போராடுகின்றனர். ஐரோப்பிய ஒ[illegible]றியக் கண்காணிப்புக் குழுவின்ரை வெளியேறச் சொல்லும் விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அரச சார்பற்ற நிறுவனத்தையும் வெளியேறச் சொல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு இந்த வாரம் சமர்ப்பிக்கப்படும்

## என்கிறார் ரம்புக்வெல



கொழும்பு —

இனப்பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பாக கூறியதாவது -

வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அனைத்துக் கட்சி ஆலோசனைக்குழுவும், அரசாங்கமும் இந்த வாரம் தமது தீர்வுகளை முன்வைக்கும்.

பல்வேறு கட்சிகள் விமர்சனம் செய்து வரும் நிலையிலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வந்துள்ளார்.

ஆனால், விடுதலைப் புலிகளிடமிருந்து எதிரான சமிக்ஞைகளே கிடைத்து வருகின்றன.

விடுதலைப் புலிகள் ஜெனிவா இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களை புறக்கணித்துள்ளது போதும் இந்த வாரம் இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் முன்வைக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

DAIDO



CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக
DAIDO, YAMATO,
HONDA, YAMAHA,
BAJAJ, SUZUKI
மற்றும் எல்லா சீனா
தயாரிப்புகளுக்குப்
பொருந்தும் உதிரிப்பாகங்கள்
வேண்டியளவு கிடைக்கும்
52,900.00

Koyo
ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



ஏகமுகவர்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341580-1, 2438779,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk

மனோகரா
யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால்,
விவேக், அப்பாஸ், மாளவிகா
மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

ராஜா யாழ்ப்பாணம்
கரண்
சாதனா
மற்றும்
பலர்
நடித்த
(புதிய
வெளியீடு)




கொக்கி
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

# மரண அறிவித்தல்



பிறப்பு
23
04
1946

இறப்பு
30
06
2006

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஐயனார் கலட்டியைச் சேர்ந்த இரத்தினசாமி சுப்பிரமணியம் அவர்கள் 30.06.2006 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு.திருமதி இரத்தினசாமி - தங்கராணி தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்ற திரு. திருமதி இராமலிங்கம் - இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், முகுந்தன் (இலண்டன்), விஜிதா (பிரான்ஸ்), சகுந்தலா (நியூசிலாந்து), ரமணன் (பிரான்ஸ்), ஜெகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவானந்தராஜா (பிரான்ஸ்), பிறேமினி (லண்டன்), பரணீதரன் (நியூசிலாந்து), சுகர்னா (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசநாதன், சிவநாதன், காலஞ்சென்ற செல்வநாதன், இராசலட்சுமி, தங்கராணி, குணசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவத்திரா, சிவனிசா, சிவாசன், துகாயினி, மதுஷா, கிருஷ்ணி, ஆதி, தமிழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.07.2006 (நாளை) 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

## இரத்தினசாமி சுப்பிரமணியம்

(சுப்பண்ணா)

நியூலக்சுமி சில்க் உரிமையாளர் பருத்தித்துறை

ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்

[2313]

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்

- திருக்குறள்

## நமது நோக்கு

# சர்வதேசத்தை ஏமாற்றும் மகிந்த

இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளை நேரடிப் பேச்சுக்கு வருமாறு மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஏற்கனவே, விடுதலைப் புலிகள் - தாம் ஒருபோதும் இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சு நடத்தத் தயாரில்லை என்று உறுதிபட மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவித்துவிட்ட நிலையில் - மகிந்த விடும் அழைப்புக்கள் யதார்த்தபூர்வமானதாக இல்லை.

நோர்வே அனுசரணையாளர்கள் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தருணத்தில் - அவர்களை தூர விலக்கிவிட்டு - நேரடியாகப் பேச அழைப்பது ஒரு நாடகமாகவே தோன்றுகிறது.

நோர்வே அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முட்டுக்கட்டைக்குள் சிக்கிப் போயிருப்பதற்கு அரசாங்கமே காரணமாகிவிட்ட நிலையில் - இந்தத் தடைகளை அகற்றி பேச்சுக்களைத் தொடங்க முனையாமல், இப்படி பின்கதவால் உறவுக்கு அழைப்பது- நிச்சயம் நல்ல நோக்கத்துடன் இல்லை என்பது தெளிவு.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் சதி வலையை நன்கு உணர்ந்துள்ள புலிகள் - அதற்குள் சிக்காமல் தப்பித்துக் கொண்டுள்ளனர்.

ஆனால், சர்வதேச சமூகத்தின் முன்பாக இலங்கை அரசு மீது அதிகரித்துவரும் நெருக்கடியை சமாளிப்பதற்காகவே - நேரடிப் பேச்சு என்ற ஆயுதத்தை இப்போது அவர் அடிக்கடி பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

சர்வதேச ரீதியில் மகிந்த விடுக்கும் இந்த அழைப்பின் 'சூத்திரம்' தெரிய வராவிடினும், அவர் புலிகளைப் பேச்சுக்கு அழைக்கிறார், ஆனால் புலிகள்தான் விலகிச் செல்கின்றனர் என்பது போன்ற மாயையை ஏற்படுத்துகிறது.

இந்த மாயையை ஏற்படுத்துவதுதான் மகிந்தவின் திட்டம் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில், இப்போது புலிகளுக்கு எதிராக சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை உருவாக்குவதில்தான் மகிந்த அதிக கவனம் செலுத்திவருகிறார்.

எனவே, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஊடகங்களைப் பயன்படுத்தி இத்தகைய 'நேரடிப் பேச்சு' அஸ்திரத்தை மகிந்த அடிக்கடி பிரயோகிக்க முற்படுகிறார்.

அதேவேளை- நோர்வேயை தூர விலக்கிவிட்டு - மகிந்த நேரடிப் பேச்சுக்கு அழைக்கும் மர்மத்தை சர்வதேச ரீதியில் தெளிவுபடுத்துவதற்கு தமிழர் தரப்பு முனைப்புடன் செயலாற்றுவதும் அவசியமாகிறது.

அத்துடன், கருணா தொடர்பாக மகிந்த முன்னுக்குப் பின் முரணாக உளறிக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. கருணாவின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தினால், படையினர் மீதான தாக்குதல்களை புலிகள் நிறுத்துவார்களா என்று இரகசியத் தூது அனுப்பியவர் மகிந்த.

கருணாவின் தாக்குதல்களை நிறுத்துவதற்குரிய அதிகாரம், சக்திவாய்ந்தவராக இருந்ததால்தான் மகிந்த இப்படியொரு இணக்கத்துக்கு வர முயற்சித்தார்.

ஆனால், இப்போது கருணாகுழு அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இல்லை என்று மகிந்த கூறியிருக்கிறார். ஆனால், அதே கருணாகுழு மட்டக்களப்பு நகரில் அரசியல் கட்சியாக இயங்குவதற்கு அனுமதித்துள்ள அரசு - இப்போது கொழும்பிலும் அலுவலகம் திறக்க ஒத்துழைப்புக்களை வழங்கிவருகிறது.


இப்படியிருக்க, கருணாவுக்கும், அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் - அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அவர்கள் செயற்படுவதில்லை என்றும் ஜனாதிபதி மகிந்த கூறுவது எவ்வளவு அபத்தமானது.

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இப்படியே முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டே-காலத்தைக் கடத்திக் கொண்டிருக்க எத்தனிக்கிறார்.

ஒரு புறம் தமிழ் மக்களை படுகொலை செய்து கொண்டு - மறுபுறத்தில் நேரடிப் பேச்சு என்ற பசப்பு வார்த்தைகளினூடே சமாதானத்தை உருவாக்கலாம் என்று சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் மகிந்த- ஏமாறிப்போகும் காலம் ஒன்று விரைவில் வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# சர்வதேசத்தின் மிரட்டல்களுக்கு தலைவர் பணிந்துவிடமாட்டார்

## கேணல் பானு தெரிவிப்பு



மட்டக்களப்பு—

சர்வதேசத்தின் மிரட்டல்களுக்கு எமது தலைவர் ஒருபோதும் பணிந்துவிட மாட்டார் என்று மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் காலத்தில் கல்முனைப் போராளிகளால் எழுதப்பட்ட 'நெருப்பில் நின்று' எனும் கவிதைத் தொகுதி நூல் மட்டக்களப்பில் லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவினரால் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலை இராமகிருஸ்ணன் மிசனில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - கேணல் பானு ஆற்றிய சிறப்புரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இன்றைய சூழ்நிலையில் எமது பிரச்சினையில் உண்மைத் தன்மையைச் சர்வதேசம் விளங்கியிருக்கிறது.

ஆனாலும், சர்வதேசம் பாரபட்சமான முடிவுகளையே எடுத்திருக்கிறது. அவர்களின் இந்த முடிவுகளுக்கும், மிரட்டல்களுக்கும் எமது தலைவர் ஒருபோதும் பணிந்துவிடமாட்டார்.

விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரையில் நாம் யாரிடமும் கையேந்தவில்லை.

போராட்டத்தை நகர்த்துவதற்கான பொருளாதாரப் பலம், ஆளணிப்பலம் அனைத்துமே எமது மக்களிடம் இருந்தே வருகிறது எனத் தெரிவித்தார்.

# பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது

கொழும்பு—

மேல்மாகாணத்தில் பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி சரத் லூகொட தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளுக்கு மேல்மாகாணத்திலிருந்து உதவுவோர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், புதிய வீதித் தடைகளும் சுற்றுக்காவல் நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்படும். கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் 300 பேர் கைது செய்யப்பட்டனர். அடையாள அட்டைகள் வைத்திருக்காதோர் உடன் விண்ணப்பிக்க வேண்டும்.

பயங்கரவாதத்தைஎதிர்த்துப் போராடு வதற்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இதேவேளை மேல்மாகாணத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகவும் அவர்களைக் கைது செய்ய பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

## அகதிகள் மறுவாழ்வுப் பிரச்சினை

# 33 கோரிக்கைகளை நிறைவேற்ற விடுதலைச் சிறுத்தைகள் வலியுறுத்து

சென்னை—

தமிழகத்துக்கு வரும் இலங்கை அகதிகளுக்கு மாத உதவித் தொகையாக 839 ரூபா கொடுக்க வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் து.ரவிக்குமார், இலங்கை அகதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ப்ல்வேறு சலுகைகளை செய்து தரவேண்டும் என்று முதல்வரிடம் வலியுறுத்தினார். அகதி முகாம்களின் நிலை குறித்தும், அகதிகள் நல்வாழ்வுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் 33 கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்துள்ளார்.

ராமேஸ்வரத்திலுள்ள அகதிகள் முகாமின் நிலை மிக மோசமாகவுள்ளது என சட்டப் பேரவையில் சுட்டுக்காட்டியவர் ரவிக்குமார். இவர் கூறியதன் அடிப்படையில் அகதி முகாம்களின் நிலை குறித்து அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர்கள் சு.ப தங்கவேலன், பெரிய கருப்பன் ஆகியோரடங்கிய குழுவை முதல்வர் நியமித்தார். இந்தக் குழுவினர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் உடனடி நிவாரண நடவடிக்கைகளுக்கு முதல்வர் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.


ரவிக்குமார் அளித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளாவன -

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு 839 ரூபா தேவை என வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழகம் வரும் இலங்கை அகதிகளுக்கு குறைந்த பட்சம் இந்தத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரிசி மட்டுமின்றி பால், பருப்பு ஆகியவற்றையும் மானிய விலையில் வழங்க வேண்டும், 10 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்க வேண்டும். குடும்பத்தினரின் எண்ணிக்கைக்கு ஏற்ப சீனி வழங்க வேண்டும். அகதி முகாம்களில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும். அகதிகளுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தர வேண்டும். குடிநீர், சாலை வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும், அகதி முகாம்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு வங்கிக் கடன் கிடைக்க வழி செய்ய வேண்டும், இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும். தொழிற்படிப்புகளில் அகதிகளின் வாரிசுகளுக்கு உரிய இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும். உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்க மருந்துவரை வாரந்தோறும் அனுப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளார்.

மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டிய கோரிக்கைகளாவன - அகதிகள் தொடர்பாக ஐ.நா சபை 1951 மற்றும் 1967 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்திய ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட வேண்டும். அகதிகள் குறித்த தேசிய சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நூல்கள் அறிமுகம்




**நூலின் பெயர்: 'வரலாற்றில் வல்வெட்டித்துறை'**
**ஆசிரியர் : பா.மீனாட்சிசுந்தரம்**
**வெளியீடு : அரும்பொருள் காப்பகம் வல்வெட்டித்துறை.**

வல்வெட்டித்துறை மக்களுக்குக் கல்விப் பணி போதித்து, பல நிறுவனங்களில் உயர்பதவிகள் பெற்றுக்கொடுத்த பாடசாலைகள் பற்றிய விபரங்களும் இடம்பெற்றுள்ளன. சிதம்பராக் கல்லூரி, சிவகுரு வித்தியாசாலை, மகளிர் மகாவித்தியாலயம், அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை என்பன கல்விப் பணிக்கு ஆற்றிய சிறப்புக்களும், வரலாறுகளும் இந்த நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

வைத்திய வசதிகளும், வைத்தியசாலையும், உள்ளூராட்சிச்சபை, வல்வை மண் பெற்றெடுத்து மறைந்துவிட்ட அறிஞர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள் பற்றிய விடயங்களில் பல முக்கிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரசியல் வரலாற்றிலும், போராட்ட வரலாற்றிலும் வல்வை மக்களின் பங்களிப்பு பாரியது. தமிழர் விடுதலைக் கூட்டணி - வல்வை மண்ணில் தான் உருவாகியதென்தோடு, போராட்ட வரலாற்றில் வல்வையின் மைந்தர்கள் என்ற கட்டுரையில் தமிழீழ தேசியத் தலைவரால் எப்படி விடுதலை புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டது என்று சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆயிரமாயிரம் இளைஞர்களை வளர்த்தெடுத்து, துணிவான தேசத்தின் பலமான படையொன்றை உருவாக்கி, எவருமே புரியாத விதமாகப் பெரும் சாதனை படைத்தவர் பிரபாகரன் என்று தேசியத் தலைவரின் சாதனையையும், பல முக்கிய தகவல்களையும் கட்டுரை ஒன்றின் மூலம் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற கொடூர யுத்தத்தால் பல கிராமங்கள், நகரங்கள் அழிக்கப்பட்டன. அந்தப் பகுதிகளில் இருந்த ஆலயங்கள், பொதுநல மண்டபங்கள் அழிக்கப்பட்டு வனாந்தரமாக்கப்பட்டன. எல்லையே தெரியாத கிராமங்களாக - நகரங்களாக இப்போது அவை காட்சியளிக்கின்றன.

இந்தச் சிதையுண்ட கிராமங்கள், நகரங்கள் தொடர்பான வரலாற்றுச்சான்றுகள், ஆவணங்கள் இன்று இல்லாததால் அதன் மகிமை அப்படியே முடங்கிப் போகும் வாய்ப்புகள் உள்ளன. இந்தப் பெருஅழிவில் இருந்து நகரங்களை, கிராமங்களைப் பாதுகாக்க அவை பற்றிய சரித்திர சான்றுகள் ஆவணமாக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் 'வரலாற்றில் வல்வெட்டித்துறை' என்ற நூல் வெளிவந்துள்ளது. இந்த நூல் பா.மீனாட்சி சுந்தரம் என்பவரால் எழுதப்பட்டது. முதலில் இந்த நூலில் 'வல்வெட்டித்துறை' என்ற பெயர் எப்படி உருவாகியது என்பது பற்றி பல குறிப்புகளை ஆசிரியர் தந்துள்ளார்.

அடுத்ததாக ஆலயங்கள் பற்றி எடுத்துரைக்கும் கட்டுரையில் - திரைகடல் ஓடி திரவியம் தேடிய வல்வெட்டித்துறை மக்களால் ஆங்காங்கே கட்டப்பட்ட, இன்று மிளிரும் ஆலயங்களின் வரலாறுகளை எடுத்துக்கூறுவதுடன், வல்வையில் இருக்கும் நெடியகாட்டு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோவில், ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் கோவில், ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்களின் சிறப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

வல்வைத் துறைமுகத்தின் சரித்திர சம்பந்தமான பல சான்றுகள் இந்த நூலில் கூறப்பட்டுள்ளன. அந்த வல்வெட்டித்துறை மக்களின் கடல்வணிகம் சம்பந்தமான குறிப்புகளோடு, அன்னபூரணிக் கப்பல் அமெரிக்காவுக்குப் பயணமானதைப் பற்றி பல அரிய தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

முன் அட்டையில் அன்னபூரணிக் கப்பலின் அழகிய தோற்றமும், வல்வெட்டித்துறையில் உள்ள கோவில்கள், தேவாலயம் என்பவற்றைத் தாங்கி வந்த இந்நூல் வல்வெட்டித்துறை நகரத்தின் சிறப்புக்கு ஆவணமாகும்.

வல்வெட்டித்துறையின் பாரம்பரிய நிகழ்வுகளையும், சமகால நினைவுகளையும் ஆவணப்படுத்துவதில் மிக ஆர்வம் கொண்ட இவரது முதலாவது ஆவண நூல் 'ஆழ்கடல் வென்றவர்கள்' என்ற அன்னபூரணி பற்றியதாகும் என்று பட்டயக் கணக்காளர் ச.செல்வேந்திரா இந்த நூல் பற்றித் தமது கருத்தைக் கூறி இருப்பதன் மூலம் இந்த நூலின் சிறப்புகளை நாம் கூறித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

மணிசேகரம்




**சஞ்சிகையின் பெயர் : 'அருள் ஒளி'**
**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**

அருள்ஒளி சஞ்சிகையின் வைகாசி இதழ் கிடைக்கப் பெற்றது. நல்லூர் சிவன் கோவில் இராச கோபுரத்தை முன் அட்டையிலும், நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் இராசகோபுரத்தைப் பின் அட்டையிலும் தாங்கி வெளிவந்துள்ள இந்த இதழில் பல் கலைக்கழகமாக மாறிய பரமேஸ்வராக் கல்லூரியை மீண்டும் உருவாக்க வேண்டும் என்று ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாவரங்களின் பண்புகளைத் தெரிந்து மனிதர்களாக வாழ்வோம், பெருவிழாக் காணும் சிவநேசச் செல்வர்கள், தெய்வ நிந்தனை போன்ற பல சமயக் கட்டுரைகளுடன் எழுதிய "யாழ் இந்துக் கல்லூரி - விபூதி வாழ்க்கை" என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

சைவ சமயத்துக்கு என்று ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் இந்த அருள்ஒளி சஞ்சிகையை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும்.

மகரம்




**சஞ்சிகையின் பெயர் : 'பொலிவு'**
**வெளியீடு : அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம்**

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான 'பொலிவு' 12 ஆவது இதழ் கிடைக்கப்பெற்றோம். இந்த இதழில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தவறான செயற்பாடுகளும், அதனால் கிடைக்கும் பலன்கள் போதிப்பதில் மாத்திரம் இருக்குமேயன்றி சாதிப்பதில் காண முடியாது என்பதைத் தெளிவுபடுத்தும் ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாதது என்ற கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆசை வார்த்தைகளால் மோசம் போன கன்னிப் பெண்களின் உண்மைக் கதையைப் பிரசுரித்து எதிர்காலத்தில் பெண்கள் மத்தியில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறக் கூடாதென்று 'பொலிவு' இன் வேண்டுகோள் இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

இடம்பெயர்ந்து முகாம்களில் ஏற்படும் சமூகச் சீரழிவுகளும், அங்கு வாழும் மக்கள் 'சோம்பேறிகள்' ஆக்கப்படுவதையும், அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவதை நிறுத்தி, அவர்களுக்கு ஒரு தொழிலைக் கற்றுக் கொடுத்து, அகதி முகாம்களில் வாழும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்று 'அபிவிருத்தியை முடக்கும் இடம்பெயர்ந்தோர் முகாம்கள்' என்ற கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் உயிர் உருவாகும் அதிசயம், கிராம மீட்சிக்காக ஏங்கும் மக்கள் போன்ற பல கட்டுரைகளும், கவிதை, சிறுகதை என்பனவும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளது.

சரவணன்

# விசர்நாய்க் கடியினால் ஏற்படும் இறப்புகளைத் தவிர்ப்போம்

மனிதர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில் பிரதான ஒன்றாக விசர் நாய்கடி நோய் அல்லது நீர்வெறுப்பு நோய் காணப்படுகிறது. இந்த விசர்நாய்க்கடி நோய் அல்லது நீர் வெறுப்பு நோய் ஒரு மனிதனுக்கு ஏற்படுமாக இருந்தால், நூறு வீதமான இறப்பை கட்டாயம் ஏற்படுத்தும். ஆனால், இவ்வளவு கட்டாய இறப்பை ஏற்படுத்தும் இந்த விசர்நாய்க்கடிநோயை நாம் மற்றைய நோய்கள் போல் அல்லாமல் மிக இலகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் எமது வாழ்க்கையை முன்னெடுத்துக் கொண்டு செல்லும் போது தடுக்கக்கூடிய இந்த விசர்நாய் கடியினால் ஏற்படும் இறப்பு பற்றி மிகவும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை எமக்கு உண்டு.

எனவே, நாம் இந்த விசர்நாய் கடியால் ஏற்படும் இறப்பை தடுக்கக் கூடிய வழிமுறைகளை ஆராய்வோம்.

**முதலுதவி**

பொதுவாக நாம் எந்தவொரு நாய் கடித்தாலும் முதலில் நாயினால் கடியுண்ட இடத்தை ஓடும் நீரினால் (பைப்மூலம் வெளியேறும் நீர்) 10 நிமிடங்கள் வரை சவர்க்காரம் இட்டு கழுவுதல் வேண்டும். ஸ்பிரிட் அல்லது 70% மதுசாரம் கிடைக்குமாக இருந்தால் அதனாலும் கழுவுதல் சிறந்தது.

எவ்வளவு விரைவாக அரசாங்க வைத்தியசாலைக்குச் செல்லமுடியுமோ அவ்வளவு விரைவாகச் செல்லுதல் வேண்டும். வைத்தியசாலையில் வைத்தியரின் கேள்விகளுக்குத் தெளிவான பதில்களைச் சொல்லுதல் வேண்டும். வைத்தியர் - கடித்த நாய் தொடர்பாகப் பின்வரும் கேள்விகளைக் கேட்பார்.

1. வளர்ப்பு நாய்க் கடியா?
2. தெரு நாய்க் கடியா?
3. விசர் நாய்க் கடியா?

இவ்வாறு கடித்த நாய் தொடர்பாக கேட்கும் கேள்விகளுக்கு நாம் சொல்லும் பதில்களை வைத்துக் கொண்டே வைத்தியர் தனது சிகிச்சை முறையைத் தெரிவு செய்வார். எனவே, நாயால் கடியுண்டவர்கள் சொல்லும் பதில் மூலமே விசர் நாய் கடியால் ஏற்படும் இறப்பும் தங்கியுள்ளது.

**தொடர்சிகிச்சை**

தற்போது நாயால் கடியுண்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் குறித்த கால இடைவெளியில் வழங்கப்பட்டு வருகிறது. எம்மில் பலர் இந்த தடுப்பூசியை இடைநடுவில் நிறுத்தி விடுகின்றார்கள். இவ்வாறு நாயால் கடியுண்டவர்கள் சிகிச்சையைப் பூரணப்படுத்தாமல் இடைநடுவில் நிறுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் மரணிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். எனவே, நாயால் கடியுண்டவர்கள் அனைவரும் அதற்கான சிகிச்சையை பூரணப்படுத்தல் வேண்டும்.

**வளர்ப்பு நாய்களின் பராமரிப்பு**

பொதுவாக எம்மில் பலர் நாயை செல்லப் பிராணியாக வளர்த்து வருகின்றனர். இவ்வாறு வளர்க்கும் போது இவற்றின் பராமரிப்பில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

அதாவது வருடாவருடம் சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் இலவசமாக ஏற்றப்படும் விலங்கு விசர்நோய் தடுப்பூசியை தவறாது ஏற்றல் வேண்டும். அத்துடன் இந்த வளர்ப்பு நாய்களை ஏனைய கட்டாக்காலி நாய்களுடன் தொடர்புபடாமல் கட்டி வளர்த்தல் வேண்டும். அத்துடன் சாப்பாட்டு நேரங்களில் வளர்ப்பு நாய்களுடன், கூடிய அவதானத்துடன் பழக வேண்டும். இலங்கையின் சட்டதிட்டத்தின் படி வளர்ப்பு நாய்களை வளர்ப்போர் அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் அங்கீகாரம் பெற்றே வளர்க்க வேண்டும். இவ்வாறு அங்கீகாரம் பெறாமல் வளர்ப்பது சட்டப்படி குற்றமான செயலாகும். எனவே, எம்மைப் பாதுகாக்க இயற்றப்பட்ட இந்த சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும் அநாவசியமான இறப்புக்களைக் கட்டுப்படுத்தலாம்.

**உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடு**

மக்களைப் பாதுகாக்கவென இயற்றப்பட்ட சட்டதிட்டங்களை இன்றைய சபைகள் முறையாகப் பின்பற்றுவதில்லை. விலங்கு விசர் நோயை கட்டுப்படுத்தும் முழுப்பொறுப்பும் இந்த சபைகளுக்கே உரித்துடையன. இந்தச் சபைகள் இதனால் ஏற்படும் பாதிப்பை உணர்ந்து செயற்படுதல் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. இன்றைய சபைகள் பாராமுகமாக நடப்பதே இன்றைய இறப்புக்குக் காரணமாகும். உள்ளூராட்சி சபைகள் நாய்களின் கட்டுப்பாட்டுக்கு மிகவும் குறைவான முக்கியத்துவத்தைக் கொடுப்பதாலேயே எமது பிரதேசத்தில் நாய் கடிக்கும் அளவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

**மிருகவைத்தியத் திணைக்களத்தின் செயற்பாடு:**

பெண் நாய்களை கருத்தடை செய்து வளர்ப்பதன் மூலம் இவற்றின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் குறைத்து விசர் நாய்கடி நோயை கட்டுப்படுத்தலாம். எனவே, மிருக வைத்திய திணைக்களம் கருத்தடை செய்வதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்.

**மக்களின் பொறுப்பு**

பொதுவாக பெண் நாய்களை வளர்ப்போர் அவற்றின் குட்டிகளை சந்தைகள், ஆலயங்கள், பாடசாலைகள், மக்கள் அதிகளவு ஒன்று கூடும் இடங்கள் என்பவற்றின் முன் விடுகின்றார்கள். இவ்வாறு விடுவதன் மூலம் விடுபவர்கள் தாம் அந்த நாய் குட்டிகளை உயிர் வாழக்கூடிய இடத்தில் விட்டுவிட்டோம் என நினைக்கிறார்கள். ஆனால், உண்மை நிலை அப்படியில்லை. அந்த நாய்குட்டிகளை அலையவிட்டு கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை அதிகரித்து தாமே கண்ணுக்குத் தெரியாத பாவம் செய்கின்றார்கள். எனவே, நாய்களை வளர்ப்போர் அவற்றின் தேவையற்ற பெருக்கத்தை தடுக்க மிருக வைத்தியத் துறையை அணுக வேண்டும்.

மேலும், நாய்கடிக்கு அதிகம் ஆளாவோர் சிறுவர்கள், வீட்டுக்கு வீடு சென்று தமது தொழில்களைச் செய்வோர், முகாம்களில், குடியிருப்புகளில் வாழ்வோர் ஆவர். மேலும் மதியநேரம் நாய்கள் பசியுடன் உள்ள வேளைகளில் வீடுகளுக்குச் செல்வோர் நாய்க்கடிக்கு இலக்காவர். நாய்களைக் கட்டி வளர்க்காத வீடுகளுக்கு செல்வதைத் தவிர்ப்பதால் பெருமளவு நாய்க்கடியை மக்கள் தவிர்க்கலாம்.

டொக்டர்.சி.எஸ்.ஜமுனாநந்தா,
சுகாதார வைத்திய அதிகாரி,
கோப்பாய்.

எவ்வளவு வீதம் நாய்க்கடியைத் தவிர்க்கின்றோமோ அவ்வளவு வீதம் நாய்க்கடியால் ஏற்படும் இறப்புக்கான அபாயத்தைத் தவிர்க்கலாம். மேலும், நாயால் கடியுண்டவர்கள் உடனடியாக விசர்நாய்த் தடுப்பூசி போடுவதனால் இறப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

எனவே, விசர்நாய் கடியால் ஏற்படும் இறப்புக்களைத் தவிர்த்தல் சமூகத்தின் கடமையாகும். இதற்கு உள்ளூராட்சி சபைகள், சுகாதாரத் திணைக்களம், மிருக வைத்தியத்திணைக்களம், கிராம சேவையாளர்கள், சமூகத் தொண்டர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. இதில் யாதேனும் ஒருபகுதியில் தவறு நிகழின் அது அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமையும்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 115 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள்

யாழ்ப்பாணம் —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேச மட்ட சமாசங்கள், மீன் பிடித்துறை முகங்களின் பாவனைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமூடாக ஜப்பான் அரசாங்கம் 115 மில்லியன் ரூபா பெறுமதியான குளிரூட்டி வாகனங்கள், உழவு இயந்திரங்கள், மின் பிறப்பாக்கிகள் என்பனவற்றை அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கையளித்தது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் அபுசலீம் இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, ஜப்பானிய உயர்ஸ்தானிகராலய 2 ஆவது செயலாளர் யசு கீறோ, மீன்பிடித்துறை கூட்டுத்தாபனத் தலைவர் அசங்க அபயகுணசேகர, வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனீஸ்லாஸ், அம்பலாங்கொ. - ஊறவத்த கடற்தொழிலாளர் சங்க கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.காமினி டி சில்வா, அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திர வள்ள உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.எல்.மீரா சாகிபு ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

குளிரூட்டி வாகனங்கள், உழவு இயந்திரங்களின் சாவிகளையும் உரிய பத்திரங்களையும் கடற்தொழில் நீரியல்வள அமைச்சர், ஜப்பானிய உயர்ஸ்தானிக இரண்டாவது செயலாளர், மீன்பிடித்துறைமுக கூட்டுத்தாபன தலைவர் ஆகியோர் வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம், சங்கங்கள், சமாசங்கள், மீன்பிடித்துறைமுக கூட்டுத்தாபன பிரதேச தலைவர்கள், பிரதிநிதிகள் வாகனங்களுக்குரிய சாவிகளையும் உரிய பத்திரங்களையும் பெற்றுக் கொண்டனர்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம், வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளர் சங்க கூட்டுறவு சமாசம், முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் ஆகியவற்றுக்கு தலா இரண்டு குளிரூட்டிகளும், பளை, பூநகரி கடற்தொழிலாளர் சங்க சமாசங்களுக்கு தலா ஒவ்வொரு குளிரூட்டிகளுமாக 8 குளிரூட்டி வாகனங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 6 குளிரூட்டி வாகனங்கள் வழங்கப்பட்டன. மிகுதி உள்ள 5 குளிரூட்டி வாகனங்களும். தென்னிலங்கையில் உள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன.

திருகோணமலை துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு உழவு இயந்திரமும் - ஒரு மின்பிறப்பாக்கியும் வழங்கப்பட்டன. எஞ்சிய 12 உழவு இயந்திரங்களும், 7 மின்பிறப்பாக்கிகளும் தென்னிலங்கையில் உள்ள மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வை கடற்றொழில் நீரியல்துறை அமைச்சு, திணைக்கள அதிகாரிகள், ஜப்பானிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள், சங்கங்கள், சமாசங்களின் பிரதிநிதிகள், துறைமுக கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (21)





நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் பொதுச்சுடர் ஏற்றுவதையும், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சிறிதரன் மலர் மாலை அணிவிப்பதையும் காணலாம்.

## "முத்தன் மனையாளே அருள்வாய் !"



கந்தும் கடல் சூழ
நித்தம் அலை மோதப்
புத்தம் புது எழிலோடே ! அம்மா
பக்தர் புடை சூழ
மெத்த அருள்கின்ற
முத்தன் மனையாளே! தேவி !
யுத்தம் போயகல
ஒத்த சமாதானம்
நித்தம் ஒலிக்க அருள்வாயே !

குட்டியபுலம் — க.ந.முத்துக்குமார்

# குரு பூரணை விழாவும் திருவிளக்கு பூசையும்

யாழ்ப்பாணம் —

தாவடி - ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி, வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குருபூரணை விழாவும், திருவிளக்குப் பூசையும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்கும் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பஜனை, திருவிளக்கு பூசை, தீப ஆராதனை என்பன நடைபெறவுள்ளன.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல்துறை தலைவர் கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராசா நாம ஜெபத்தின் மகிமை என்ற பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## கணினிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

கொக்குவில் இந்துக் கல்லூரி - இராஜபரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப நிலையத்தால் கடந்த 25 ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட கணினிக் கருத்தரங்கு நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு இராஜ பரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப நிலையம் அறிவித்துள்ளது.

# உத்தரிய மாதா கோவில் திருநாள் கொண்டாட்டம்

கொக்குவில் —

குருநகர் உத்தரியமாதா தேவாலய வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எட்டு தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி வழிபாடு, பிரசங்கம், திருப்பலி ஆசீர்வாதம் என்பன இடம்பெறும்.

நற்கருணை விழா 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி வழிபாட்டைத் தொடர்ந்து நற்கருணைச் சுற்றுப்பிரகாரம் நடைபெறும்.

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து 8 மணிக்கு திருச்சொரூப தேர்பவனி இடம்பெற்று சொரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் கொண்டாட்டம் நிறைவடையும். (206)

# நெல்லியடியில் கைதான இளைஞர்கள் விடுதலை

நெல்லியடி —

நேற்று முன்தினம் நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நெல்லியடி - முடக்காடுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து படையினரால் கைதுசெய்யப்பட்ட துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த தங்கராஜா தர்மகுலசிங்கம், வேரவில் கொடிகாமத்தைச் சேர்ந்த இராஜதுரை அகிலேஸ்வரன் ஆகிய இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

# இந்துக்கல்லூரி சமூகத்தை அச்சுறுத்தியமை: தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

யாழ் இந்துக்கல்லூரியினுள் அத்துமீறி நுழைந்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை அச்சுறுத்தி சென்றதுடன் அவர்களைப் படம் பிடித்த சம்பவத்தை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்வு இராணுவத்தால் முடக்கப்பட்டுக்கிடக்கின்ற நிலையில் பெரும் அச்சத்தோடு தமது நாளாந்த கருமங்களைச் செய்துவருகின்ற குடாநாட்டு மக்களிடையே - உயிரைக் கையில் பிடித்தவாறு மாணவர்கள் பாடசாலை சென்று கல்விகற்று வருகின்றார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இராணுவ நெருக்குவாரங்களுக்கு உள்ளாகி தனது அன்றாட செயற்பாடுகளை நகர்த்திவந்தது. தினமும் பாடசாலை வளாகத்தின் உள்ளும், பாடசாலை சுற்றாடலினுள்ளும் இராணுவத்தினர் ரோந்து செல்வதும், பாடசாலைக்குள் அத்துமீறி உள்நுழைவதும், மைதானத்தை பாவிப்பதிலோ, துணைப்பாடவிதான செயற்பாடுகளிலோ மாணவர்கள் பாடசாலை சூழலில் ஈடுபடுவதை இராணுவத்தினர் தடுத்திருந்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாடசாலைக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவீச்சை சாட்டாக வைத்து பாடசாலையினுள் நுழைந்த இராணுவத்தினர் பாடசாலை மாணவர்களைத் தூக்கியபடி உள்நுழைந்து ஆய்வுகூடத்தை சேதப்படுத்தியதோடு ஏனைய சொத்துக்களையும் சேதப்படுத்திச்சென்றுள்ளனர்.

நேற்று பாடசாலை வளாகத்தினுள் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இராணுவம் - அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை மிகமோசமாக அச்சுறுத்தியதோடு - பல மணி நேரமாக படம்பிடித்துச் சென்றனர்.

எந்த நேரத்திலும் இராணுவத்தினரால் எதுவும் நிகழலாம் என அஞ்சிக் கொண்டிருந்த நிலையில் - இராணுவம் ஆயுதமுனையில் அராஜகம் நிகழ்த்தியது அதிபர், ஆசிரியர், மாணவர்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தை மாணவர்களாகிய நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இந்துக்கல்லூரிக்கும், ஏனைய பாடசாலைகளுக்கும் இராணுவத்தினரிடமிருந்து விடிவுகிடைப்பதை மாணவர்களும் ஏனைய கல்விச் சமூகத்தினரும் எதிர்பார்க்கின்றனர். அன்றேல் பாடசாலைகளை மூடிவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலையே உருவாகும்.

எனவே, இராணுவத்தரப்பு தனது மனித உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இராணுவத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கேசன்துறை முகாமில் இரு இளைஞர்கள் தடுப்பு!

யாழ்ப்பாணம் —

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இரு இளைஞர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.

கடந்த 27 ஆம் திகதி புத்தூர் சந்தி-மீசாலையில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட கணபதிப்பிள்ளை கிரிதரன் (வயது 16), கணேசமூர்த்தி ஜெயரூபன் (வயது 23) ஆகிய இருவரையுமே மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் காங்கேசன்துறைக்குச் சென்று பார்வையிட்டதாக -

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணி றெமீடியஸ் தெரிவித்தார்.

# இளவாலை குடும்பஸ்தரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - இளவாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

இளவாலை அகுத்தர் ஒழுங்கையைச் சேர்ந்த சவரிமுத்து அன்ரன் நியூட்டன் வயது 36 என்பவர் கடந்த 21 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

வவுனியாவிலிருந்து - யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டு வந்த போதே இவர் காணாமல்போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், காணாமல்போன நபரின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை இரண்டும் சாவகச்சேரி தபால் நிலையத்திலிருந்து இளவாலை தபால் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு அவரின் குடும்பத்தவர்களிடம் கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கயிறு திரிக்கும்தொழிற்சாலை நாவற்குழியில் திறந்துவைப்பு

தென்மராட்சி —

நாவற்குழி தெற்கில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கயிறு திரிக்கும் கைத்தொழிற்சாலை ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் சுயதொழில் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையத்தின் கட்டடத்தை பேராசிரியர் வி.பி.சிவநாதன் நாடாவைவெட்டி திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி மேகலிங்கம் கலந்து கொண்டார்.

இந்தக் கைத்தொழில் நிலையத்தின் மூலம் நாவற்குழி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுப்பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




கரும்புலிகள் நினைவுநாள் நிகழ்வில் கரும்புலிப் போராளிகள் மத்தியில் பொதுச்சுடர் ஏற்றுகிறார் தேசியத் தலைவர்.

# இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் இராணுவத் தீர்வு சாத்தியமாகாது

## விடைபெறும் அமெரிக்க தூதுவர்

கொழும்பு—

நாளாந்தம் இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து மீண்டும் போர் வெடிக்கும் ஆபத்து தோன்றியுள்ளதாகவும் - ஆனால், இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது என்று பதவியிலிருந்து மாற்றலாகிச் செல்லும் அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லன்ஸ்ரிட் தெரிவித்தார்.

மூன்று வருட காலம் கொழும்பில் பணியாற்றிய இவர் - மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

இலங்கையில் இருந்து விலகிச் செல்லும் போது சில கவலைகள் ஏற்படுகின்றன.

அமைதிப்பேச்சுக்கள் மீளத் தொடங்கப்படவில்லை. போர்நிறுத்தம் கடும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது. வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இலங்கை தமது படைகளை ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் நடப்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் அரச படைகள் கொலைகள், வன்முறைகளில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன.

அதேவேளை - புலிகள் வன்முறைகளையும், தீவிரவாதத்தையும் கைவிட்டு அரசியலுக்கு வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாரதியைத் தாக்கிய படைச் சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம்—

அண்மையில் கொக்குவில் பகுதியில் வைத்து இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் சாரதி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய் இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் இராணுவத் தளபதியிடம் கேட்டபோதே - மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

## சுன்னாகத்தில்...

நடத்தப்பட்டது.

நேற்றிரவு 7.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - நான்கு பொலிஸார் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து கே.கே.எஸ் வீதியைத் தடைசெய்த படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

இதேவேளை ,நேற்று பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் சந்திக்கு அருகில் ரோந்து சென்ற படையினர் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்திலும் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமுற்றதாக்கூறப்படுகிறது. இதேவேளை, வடமராட்சி - உடுப்பிட்டி சந்தி இராணுவக் காவலரண் மீது நேற்றிரவு 8 மணியளவில் இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. எனினும் சேத விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

## இந்துக்...

வகையில் படையினர் இவ்வாறு செயற்பட்டனர் என்றும் எனினும் தாம் உணர்வுபூர்வமாக நிகழ்வை நடத்தி முடித்ததாக இந்துக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

இதேவேளை, இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டப முன் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் கிரனேட் கிடந்ததாகக் கூறி படையினர்- குண்டு செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவுக்கு அறிவித்தனர். இதையடு த்து குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் குறித்த இடத்துக்கு வந்து அந்த கிரனேட்டை வெடிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யுத்த உபகரணங்களுடன் சென்ற அதிரடிப்படைச் சிப்பாய் கைது!

கொழும்பு—

விடுமுறையில் வீட்டுக்குச் சென்ற விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து யுத்த உபகரணங்கள் சில கைப்பற்றப்பட்டன.

மொனராகலையிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற பஸ் நேற்று முன்தினம் காலை தங்காலை வெடிகல எனும் இடத்தில் சோதனையிடப்பட்டது.

அதில் பயணித்த விசேட அதிரடிப் படை சிப்பாய் ஒருவரிடமிருந்து ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டதுடன், அந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் குண்டுகளை வெடிக்க வைக்கப் பயன்படும் 9 மீற்றர் நீளமான வயர் ரோல்கள் - 02, 6 மீற்றர் நீளமான டெட்டனேட்டர் கோட்ரோல்கள்- 02, தன்னியக்கத் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தொலைநோக்கி, மோட்டாரின் பாகங்கள் மற்றும் சீருடைகள் என்பன இருந்ததாக தங்காலை பொலிஸ் அதிகாரி உபாலி ஹேவகே தெரிவித்தார்.

மாத்தறையைச் சேர்ந்த அந்த நபர் கிழக்கு மாகாணத்தில் பணியாற்றி வருபவராவார். விடுமுறையில் செல்வதால் இவற்றை எடுத்துச் செல்வதாக அவர் கூறினார்.

இந்த வகையான பொருட்கள் யுத்த நடவடிக்கைகளுக்குத் தவிர சாதாரண வாழ்வுக்கு தேவைப்படாததால் விடுமுறையில் செல்லும் போது இவற்றை எடுத்துச் சென்றமை பிரச்சினைக்குரிய விடயம் என்று அதிரடிப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அதிரடிப்படை சார்பில் உள்ளக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (தே)

## கிளைமோர்...

கருணாதிலக என்ற இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

## பெண்ணைக் கொன்று...

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

நேற்று முன்தினம் இரவு உடுவில் - பொன்னையா வீதியில் மேற்படி வீட்டில் தாயும், மகளும் தனிமையில் இருந்தபோது உள்ளே புகுந்த கொள்ளையர்கள் தாயையும், மகளையும் தாக்கியுள்ளனர்.

இதன்போது பிடரிப்பகுதியில் பலத்த அடிகாயங்களுக்குள்ளான மகள் உயிரிழந்தார். தாயார் அம்பலவாணர் கணேசம்மா (வயது84) படுகாயமடைந்து வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின்போது கொள்ளையர்கள் வீட்டிலிருந்த நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் சறோஜினி" இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டார். உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் மானிப்பாய் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

## எமது பலமே...

அமைதியான வாழ்வை உருவாக்க முடியும்.

உலக ரீதியாக சமாதானத்தின் அடிப்படையின் தரவாக சமாதானத்தின் அடிப்படையாக பலமே இன்று விளங்குகிறது.

தமிழ்மக்கள் பலவீனமாக இருந்த காலத்தில் எல்லாம் தமிழர்கள் அடிக்கப்பட்டார்கள், உதைக்கப்பட் டார்கள், வெட்டப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள் மற்றும் எரிக்கப்பட்டார்கள்.

.ஆனால், இன்று எமது இயக்கம் தமிழீழ மக்களின் விடுதலை இராணுவம் பலமடைந்த வேளையில் எமது வெற்றியை பெறுவதற்கு தடையாக இருக்கும் முக்கிய இலக்குகளை அழிப்பதற்கு கரும்புலிகள் தமது உயிரை ஈகம் செய்கிறார்கள்.

எமது விடுதலைக்கான தடை ஒவ்வொன்றையும் அகற்றி தாயகத்துக்கான வெற்றி ஒன்றைப் பெற்றுத் தர இளைய கரும்புலிவீரர்கள் பயணம் புறப்பட போவார்கள்.

அவர்களை வழியனுப்புகின்ற நெஞ்சுகனக்கிற வேளையில் எமது மக்களின் பலமெல்லாம், தமிழ் மக்களின் சக்தியெல்லாம் இந்த இளைய வீரர்களுக்கு பின்னால் நிற்குமாக இருந்தால் இவர்கள் இன்று தமது உயிர் விலைஎ்ய கொடுக்க வராதோ என்று எண்ணுவதுண்டு.

இது போன்ற உயிர்விலைகள் நாளையும் கொடுக்கப்படத்தான் வேண்டும். அந்த உயிர்விலைகளை இல்லாதாக்க அல்லது குறைத்துக் கொள்ள நாம் ஆயுத ரீதியாகவும், ஆய்வு ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் பலம் பெறவேண்டும், வளம் பெறவேண்டும். அதற்கு புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரள் வேண்டும். விடுதலை இயக்கத்தை பலமாக்க வேண்டும் எனஅவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழர் தாயகம் எங்கும்...

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் ஏற்றினார்.

அதையடுத்து கரும்புலிகள் நினைவுப் படத்துக்கான ஈகச்சுடரை பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ் ஏற்றினார். கரும்புலிகள் நினைவு பொதுப் படத்துக்கான மலர் மாலையை விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் சிறிகரன் அணிவித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலர்வணக்கம் செய்ததைத் தொடர்ந்து சிறப்புரைகளை சமூகவியல் அரசியல்துறை பேராசிரியர் சண்முகலிங்கன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தேவராஜா, பதில் துணைவேந்தர் குமாரவடிவேல் ஆகியோர் நிகழ்த்தினர்.

காவல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற நிகழ்வில் காவல்துறையின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்கண்ணாளன் தலைமை வகித்தார்.

பொதுச் சுடரை சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார். தேசியக் கொடியை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார். ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட கண்காணிப்பாளர் தனஞ்செயன் ஏற்ற, மலர்மாலையை பா. நடேசன் அணிவித்தார்.

தமிழீழ மாவீரர் பணிமனை நடுவப் பணியக நிகழ்வுக்கு நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தாயார் திருமதி பொன். தியாகம் ஏற்றினார். தேசியக் கொடியை கிளிநொச்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தவம் ஏற்றினார்.

மன்னார் - அடம்பன்குள றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தில் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் டென்சில் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் - பொதுச்சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லக்ஸ்மன் ஏற்ற, தேசியக்கொடியை மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அன்பு றெஜி ஏற்றி னார்.

சிறப்புரையை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அச்சுதன், தளபதி லக்ஸ்மன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வவுனியா மாவட்டத்துக்கான கரும்புலிகள் நிகழ்வு நெடுங்கேணியில் நெடுங்கேணிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் பொதுச்சுடரை ஏற்ற, தேசியக் கொடியை தளபதி சித்திராங்கன் ஏற்றினார்.

கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு தளபதி இள்ம் புலி, நெடுங்கேணிப் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜீவ நந்தினி, நெடுங்கேணி தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் மற்றும் கரும்புலி மாவீரர்களின் பெற்றோர் ஆகியோர் சுடரேற்றி மலர்மாலைகளை அணிவித்தனர்.

புளியங்குளம் பிரதேசத்துக்கான நிகழ்வு பிரதேசப் பொறுப்பாளர் இந்திரன் தலைமையில் புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றி தளபதி ஆதவன் சிறப்புரை நிகழ்த்தினார்.

யாழ். மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு பளையில் நிர்வாகப் பொறுப்பாளர் சுதாஸ் தலைமையில் நடை பெற்றது. வடமராட்சி பொது அமைப்புக்களின் தலைவர் பொதுச்சுடரை ஏற்ற, தேசியக் கொடியை கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் இரத்தினம் ஏற்றினார். ஈகச்சுடரை அருள் ஏற்ற மலர் மாலையை பளைக் கிராம அலுவலர் பாலசுந்தரம் ஏற்றினார்.

அம்பாறையில் கஞ்சிகுடிச்சாறு கட்டளை பணியகத்தில் கனரக ஆயுதப் பொறுப்பாளர் தவமாறன் தலைமையில் கரும்புலிகள் நாள் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி ராம் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை மோட்டார் படையணிப் பொறுப்பாளர் மோகன் ஏற்றினார்.

தொடர்ந்து கரும்புலி மாவீரகளின் திருவுருவப் படத்துக்கு மகளிர் படையணி பொறுப்பாளர் புரட்சிகா ஈகச்சுடரை ஏற்றி மலர் மாலை அணிவித்தார். நிகழ்வில் சிறப்புரைகளை மாவட்ட மருத்துவ பொறுப்பாளர் இதயன், மாவட்ட கட்டளைத் தளபதி ராம் ஆகியோர் நிகழ்த்தினர்.

பாவட்டா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு உடும்பன்குளக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் வீரமணி தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பொதுச்சுடரை கண்ணிவெடிப் பொறுப்பாளர் பரமானந்தன் ஏற்ற தேசியக் கொடியை லெப்ரினன்ட் கேணல் மாதுரியன் படையணிப் பொறுப்பாளர் மதுரகவி ஏற்றினார்.

## இரட்டை வேடம்...

அமைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக சு.ப. தமிழ்ச் செல்வன் கூறியதாவது-

ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாது.

அதிகாரப் பகிர்வு தொடர்பான குழு குறித்து எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு மகிந்தராஜபக்ஷ அளித்திருக்கும் பதில் - அவரது இரட்டை வேடத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கை அரசியல் யாப்பின் கீழான பேச்சுக்களுக்கு கொழும்பு விடுத்திருந்த அழைப்பை பல தசாப்தங்களுக்கு முன்பே தமிழர்கள் நிராகரித்து விட்டனர்.

ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தையும் பல தசாப்த காலத்துக்கு முன்பே தமிழர் தரப்பினர் நிராகரித்துவிட்டனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையான நடைமுறைச் சாத்தியமான அம்சங்களை நிறைவேற்றாமல், ஜெனிவா 1 இல் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் - சர்வதேச சமூகத்தை தவறாக வழிகாட்டும் ஒரு திட்டமிட்ட செயற்பாடு இது.

தமிழ்மக்கள் மீது படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டு மீள ஒரு புதிய கண்டுபிடிப்பை செய்தது போல கொழும்பு அழைப்பு விடுத்துள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உண்மையான அக்கறை மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்குமேயானால் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளை உடன் நிறுத்தவேண்டும்.

வடக்கு-கிழக்கில் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அகற்றவேண்டும்.

அனுசரணையாளர்கள் உதவியுடனான அமைதிப் பேச்சுக்களுக்கு ஏதுவான சூழ் நிலையை உருவாக்க வேண்டும். இதுதான் உடனடியான, அவசரமான தேவை என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.